கோரும் நபர்கள் ஐந்து மரங்களை நட்டு சான்று காட்டினால் தான் பிளான் அனுமதிக்கப்படும் என்ற திட்டத்தை செயல் படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) எப்பொழுது முதல் அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: (அ), (ஆ) மற்றும் (இ) இது குறித்த செயல்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை ஆனால், இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை செயல்படுத்த மாநகராட்சி ஆய்வு செய்து வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மாநகராட்சி ஆய்ந்து கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். பிளான் கொண்டு வருபவர்கள் மரம் நடுவதற்கு அவர்களுக்கு சொந்தமான இடத்திலே மரத்தை நட வேண்டுமா? அல்லது எங்கே நடுவது என்பதை விளக்கினால், உறுப்பினர்கள் துணைக் கேள்வி கேட்பதற்கு வசதியாக இருக்கும். இதை விளக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இதெல்லாம் முடிந்த பின் விளக்கமாக பதில் சொல்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பை அரசாங்கத்திற்கு மாநகராட்சி அனுப்பியிருக்க வேண்டும். ஒருவர் கட்டிடம் கட்டுவதற்கான பிளானைக் அனுப்புகிறார். அவர் தன் சொந்த இடத்திலே மரங்களை நட வேண்டுமா? அல்லது அந்த மரங்களை எங்கே நடுவது என்பதைச் சொல்ல வேண்டும். விடையில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்று சொல்வதால் அமைச்சர் அவர்கள் இதை மேலும் விளக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, எங்கே அவர்கள் மரத்தை நடவேண்டுமென்று நினைக்கிறார்களோ, அந்த இடத்தில் நட வேண்டும். பக்கத்து வீட்டில் அல்ல.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள எரிவாயு உற்பத்தி செய்யும் சாதனம்

*வினா எண் 51—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மனையில் உள்ள 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள எரிவாயு உற்பத்தி செய்யும் சாதனம் செயல்படுகிறதா?

(ஆ) செயல்படவில்லை என்றால் எவ்வளவு காலம் செயல்படவில்லை?

1982 செப்டம்பர் 10]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) செயல்படவில்லை. (ஆ) ஜூலை 1968-ல் பழுதுபார்த்து, 9.7.1977க்குப் பிறகு முழுமையாக செயல் படவில்லை.

திரு மு. அப்பாதுரை; பேரவைத்தலைவர் அவர்களே, ஏறத்தாழ 14 ஆண்டு காலமாக 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட அந்த சாதனம் செயல்படாமல் இருக்கிறது. அதே முறையில் கல்லூரிக்கு இன்றைக்கு பல இலட்ச ரூபாய் செலவில் எரிபொருள் வாங்குகிறார்கள். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக அதைச் செயல்படுத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு கியாரண்டி பீரியட் கொடுத்திருந்தார்கள். 12 மாதங்களுக்கு கொடுத்திருந்தார்கள். அதில் 1968 ஜூலை மாதத்தில் கிராக்ஸ் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவந்தது. அதற்குப் பிறகு, பார்த்ததிலே 15 மாதங்கள் ஆகிவிட்டது என்பதற்காக, அதற்கு கியாரண்டு பீரியட் முடிந்து விட்டது என்பதற்காக, அவர் அதைச் செயல்படுத்துவதற்கு முன்வரவில்லை. அதற்குப் பிறகு 1973 ஆம் ஆண்டு அது ஒரு பெரிய பிரச்னையாக சட்டசபையில் விவாதம் நடந்தது அதற்குப் பிறகு அதைப்பற்றி பல்வேறு புகார்கள் வந்ததற்கு பிறகு, விசாரணை நடந்தது அதற்கு In the Circumstances repoted by the Director of Medical Education, it is for order whether the matter may be dropped என்று கேட்கப்பட்டது. அதற்குப் பிறகு 'மே பி டிராப்ட்' என்று 1.11.73 அன்று அன்றைய அமைச்சரால் உத்தரவிடப் பட்டிருக்கிறது. மீண்டும் நான் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அது நியாயமில்லை என்று நான் என்னுடைய உத்தரவைச் சொல்லியிருக்கிறேன். எனக்கு சோப்பு வந்த நேரத்தில், I fully endorse the views of the Health Secretary. I would like the responsibility to be fixed and strangent action taken agaiust the officer concerned however I and mighty be the officer may be This should be done expeditously.

என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே பழுது பட்டதை போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மீண்டும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும், யார் குற்றவாளி என்று பார்த்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவு போட்டிருக்கிறோம். இவ்விஷயம் பி.ஏ.சி. கமிட்டிக்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

திரு மு. அப்பாதுரை, பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உற்பத்திச் சாதனம் தொடங்கினால் இன்றைக்கு திருநெல்வேலி பாளையங்கோட்டை, மேலப்பாளையம் ஆகிய 3 நகரா

களுக்குமே எரி வாய்வு சப்ளைச் செய்யக்கூடிய அளவுக்கு கேப்பாசிட்டி அதற்கு இருப்பதாக சொல்லப்படுவது உண்மையா? அப்படியானால பல ஆயிரக்கணக்கான ரூபாய் அதை மெயின் டெயின் செய்வதற்கு செலவழிக்கப்படுகிறது என்பது உண்மையா இன்று அதை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் இல்லை என்றால் ஆயிரக்கணக்கான ரூபாய் வீணாக செலவு ஏற்படுவதை தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. இப்போது உடனடியாக புதுப்பித்து அதை செயல் முறையில் கொண்டு வந்து நமக்கு பயன் அளிக்கக்கூடிய நிலமைகளை ஏற்படுத்தவேண்டும் என்று தான் உத்திரவு போட்டிருக்கிறோம். இன்றைக்கு நாம் பணத்தையும் ஒதுக்கி இருக்கிறோம்.

திரு ரா. கிருஷ்ணன் ' மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது செயல்படாமல் இருப்பதற்கு காரணம் யார் என்று ரெஸ்பான்ஸிபிளிட்டி பிக்ஸ் பண்ண வேண்டும் என்று உத்தரவு போட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் யார் மீது ரெஸ்பான்ஸிபிளிட்டி பிக்ஸ் பண்ணப்பட்டிருக்கிறது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ,தொடர்ந்து இலாக்காவிலிருந்து இது கூட்டு பொறுப்பு என்றும், யார் ரெஸ்பான்ஸபிளிட்டி என்று பிக்ஸ் பண்ண முடியாது என்றும் ஒவ்வொரு தடவையும் நாம் கோப்பு அனுப்புகிற போது பதில் வந்திருக்கிறது. இதற்கு சாட்சியங்கள் இல்லை என்று பதில் வந்திருக்கிறது, நாம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. என்ன இருந்தாலும் எவ்வளவு பெரிய உயர் மட்ட அதிகாரியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற முறையில் சொல்லியிருக்கிறோம். எப்படியாவது இதை ஒரு அசுரன்ஸாக நான் இங்கே சொல்லி அது அசுரன்ஸ் கமிட்டிக்கு வரவேண்டும் என்பதற்காக நான் சொல்லியிருக்கிறேன். எப்படியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம்.

அரசு மருத்துவமனைகளிலுள்ள அறுவை சிகிச்சை
அறைகளில் அவசர விளக்குகள் பொருத்தும் திட்டம்

*வினா எண். 52—திரு வி. பாலகிருஷ்ணன் , மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் அவசர விளக்குகள் அறுவைச் சிகிச்சை அறைகளில் பொருத்தப்படும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது பொருத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே , (அ) ஏற்கெனவே பல அரசு மருத்துவமனைகளில் அவசர விளக்குகள் அறுவைச் சிகிச்சை அரங்கில் பொருத்தப்பட்டுள்ளன.